


அ. க. நவநீதகிருட்டிணன்

கழக வெளியீடு : ௯௱௭

# திருவள்ளுவர் கதை

[வில்லுப் பாட்டு]

வித்துவான்

அ. க. நவநீத கிருட்டிணன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: Dec., 1952.
Repirnt: Dec., 1958.

# TIRUVAḶḶUVAR KATHAI
[Villup Pattu]

[*All Rights Reserved*]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office*:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1000.

# பதிப்புரை

தென்பாண்டிநாட்டுச் சிற்றூர்களில் இன்றும் வில்லிசை வழக்கத்திலிருக்கின்றது. சிறுதெய்வ வழிபாடுகளில் சிறுதெய்வக் கதைகளான வில்லுப்பாட்டுகள் முதன்மை பெற்று விளங்குகின்றன.

வில்லிசையை அனைவரும் கேட்டு மகிழவேண்டும் எனில், சிறந்த வரலாறுகள் அவ்விசைப்பாட்டாகப் பாடப்படவேண்டும்.

புலவர் நவநீதகிருட்டினனார் இத்துறையில் முயன்று தமிழ் வளர்ந்த கதையினை ஆக்கினர். அதனை வில்லுப் பாட்டாகப் பாடிப் பலரையும் மகிழ்வித்தனர். கழக வெளியீடாகவும் அதனை வெளியிட்டோம்.

இப்போது அவர்கள் ஆக்கிய 'திருவள்ளுவர் கதை' கழக வில்லுப்பாட்டுவரிசையின் இரண்டாவது புத்தகமாக வெளிவருகின்றது. தமிழகம் ஏற்று மகிழும் என நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# அணிந்துரை

தென்பாண்டிநாட்டின் தீந்தமிழ்க் கலைச்செல்வங்களுள் ஒன்றாகிய வில்லிசையில் நல்லிசைப் புலவர் பல்லோர் வரலாற்றையும் அமைத்துக் கற்றாரும் கல்லாரும் ஒருங்கு கேட்டு மகிழுமாறு செய்யவேண்டும் என்னும் எண்ணத்தால், சில்லாண்டுகட்கு முன்னர் நெல்லையில் நிகழ்ந்த வள்ளுவர் விழாவில் இடை நிகழ்ச்சியாக நடையுறுத்தவேண்டித் தெய்வப் புலவர் திருவள்ளுவர் வரலாற்றை அரைமணி நேர அளவில் பாடுதற்கு வில்லுப் பாட்டாக அமைத்தேன்.

வில்லிசையின் மறுமலர்ச்சிக்குக் காரணமான "தமிழ் வளர்ந்த கதை" வில்லுப்பாட்டை விருப்புடன் வெளியிட்டருளிய, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்து ஆட்சியாளர் திருவாளர் வ. சுப்பையாபிள்ளையவர்கள், எனக்கு அவ் வில்லிசைத்துறையில் பேரூக்கமூட்டித் திருவள்ளுவர் வரலாற்றையும் நீண்டநேர நிகழ்ச்சிக்குப் பயன்படும் வகையில் பாட்டினை நீட்டிப் பெரிதாக்கித் தருமாறு கூறினார்கள். அவர்கள் தந்த ஊக்கத்தின் உறுபயனாகவே இத்திருவள்ளுவர் கதை - வில்லுப் பாட்டையும் ஆக்கினேன்.

வள்ளுவர்க்கு வரலாறு நேரிய முறையில் இல்லையென்பதை எல்லோரும் அறிவர். பலரும் பலவிதமாக எழுதிப் போந்தனர். அம்முன்னோர் மொழிபொருளைத் தழுவிப் பின்னோரும் ஏற்றுப் போற்றுமாறு எனது சிற்றறிவுக்கு எட்டிய வரையில் புதியது புனைதலாகப் புலவர்பெருமானது வரலாற்றை வில்லிசையில் அமைத்துத் தந்துள்ளேன். இதனைக் காணும் அறிஞர்உலகம் அன்போடு ஆதரித்துப் போற்றுமெனநம்புகிறேன்.

தமிழ் வெல்க !

அ. க. நவநீத கிருட்டிணன்.

உ

தமிழ் ஓங்குக !

# திருவள்ளுவர் கதை

## கடவுள் வணக்கம்

### பாட்டு

உலகின் ஒருமுதலே அலகில் பேரறிவே
மலரில் உறைவோனே மகிழ்விகழ் வில்லோனே
ஆசைகள் அற்றோனே மாசில் அறத்தோனே
நேசர் மனத்தோனே நிகரொப் பில்லோனே
பிறவி அறுப்போனே பேரெண் குணத்தோனே
குறைவில் நிறைவோனே கொழிதமிழ் வடிவோனே
தண்ணருள் பண்ணவேண்டும் தமிழிசை பாடவேண்டும்
புண்ணியத் தெய்வக்கதை புலவர் தலைவர்கதை
நந்தமிழ் நாட்டினுக்கே நற்பெருமை தந்தகதை
செந்தமிழ் வள்ளுவராம் தெய்வப் புலவர்கதை
பொய்யில் புலவர்கதை மெய்வேதம் வந்தகதை
செய்யதமிழ் மொழியதனில் தேயமெலாம் திருத்துகதை
வையகம் வாழ்வதற்கு வழிவகுத்த வள்ளல்கதை
இங்குள்ள மக்களெல்லாம் இன்பமுடன் கேட்கவேண்டும்
பொங்கும் நறுந்தமிழில் புத்தமுதாய்ச் சொரியவேண்டும்
வற்றாத பேரருளை வாரி வழங்கவேண்டும்
கற்றவர் போற்றியிடும் கருணைவடி வானவனே.

## வசனம்

தெய்வப்புலவராகிய திருவள்ளுவரின் திருக்கதையைக் கேட்கும் வேட்கையுடன் திரண்டுவந்து அமர்ந்திருக்கின்ற அருந்தமிழ்ப் பெருமக்களே! அன்புருவாம் தாய்மார்களே! எல்லோருக்கும் எங்கள் பணிவான வணக்கம். இப்போது உலகப் பொதுமறையாகிய உயர்ந்த திருக்குறளை மக்கள் எல்லோரும் உய்யும்வண்ணம் உரைத்தருளிய மாபெரும் தெய்வப்புலவரின் திருக்கதையை நாங்கள் வில்லிசையில் அமைத்துச் சொல்லவேண்டும். நீங்கள் அதைக் கேட்கவேண்டும் அல்லவா! நாம் செய்த நற்றவப் பயனால்—இல்லை இல்லை!—தீவினைப்பயனால் நம் தமிழ்நாட்டுப் பழம்புலவர்களின் வரலாறு ஒன்றும் தெரிய வழியில்லை. அந்த முறையில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட முதற் பாவலராகிய திருவள்ளுவப் பெருமானின் அரிய வரலாறும் தெரிய வழியில்லை. ஆதலினாலே அவருடைய கதையை மிகமிகச் சுருக்கமாக இரண்டே வாக்கியங்களில் சொல்லி முடித்துவிடலாம், நீங்களும் காலத்தை வீணாக்காது கடிதே சென்றுவிடலாம்.

முன்னாளில் மன்னன் ஒருவன் தன்னுடைய அவைக்களத்தில் புலவர் பலரை வரவழைத்து அவரவர் திறங்கண்டு மகிழ்ந்து புகழ்ந்து ஏற்ற பரிசுகளை இனிது வழங்கினான். அந்த மன்னன் அவை கலைகின்றவேளையில் புலவன் ஒருவன், கால்கடுக்க மேல்வலிக்க வேகமாக ஓடோடி வந்தான். அரசே! எனக்கும் பரிசளிக்கவேண்டும் என்று பரிந்து வேண்டினான். மன்னன், அப்புலவனை நோக்கி, "உமக்கு என்ன தெரியும்" என்று கேட்டான். புலவன், "நான் இராமாயணம் இனிது சொல்லவல்லேன்" என்று சொல்லினான். "அப்படியா! இப்போது அவை கலையும்

வேளை; ஆதலால் எனது கையிலுள்ள எலுமிச்சம்பழத்தை மேலே வீசிப்பிடிக்கும் வேளைக்குள் இராமாயணக் கதையைச் சொல்லி முடிக்கவேண்டும்," என்று பணித்தான். உடனே புலவன் இராமாயணம் சொல்லத் தொடங்கினன். மன்னன் கையிலிருந்த எலுமிச்சம்பழத்தை மேல்நோக்கி வீசினன். மீண்டும் அதனைக் கையில் ஏந்திப் பிடிப்பதற்குள் புலவன் இராமாயணத்தைச் சொல்லி முடித்துவிட்டான். எப்படிச் சொல்லி முடித்தான் என்று கேட்பீர்களோ?

"இராமன் பிறந்தான்
இராவணன் இறந்தான்"

இவ்வளவுதான் அந்தப் புலவன் சொல்லிய இராமாயணக் கதை. கதையைக் கேட்ட மன்னன், புலவனுக்கு ஆயிரம் பொன்னை அள்ளிக்கொடுத்தான்.

இந்தக் கதையைப் போலவேதான் இரண்டே வாக்கியங்களில் திருவள்ளுவர் கதையையும் சொல்லமுடியும். அது எப்படியென்று கேட்பீர்களோ?

"திருவள்ளுவர் பிறந்தார்
திருக்குறளைச் செய்தார்"

இவ்வளவுதான் திருவள்ளுவரைப்பற்றி உண்மையான கதை சொல்லமுடியும். இந்த அளவில் கதையைச் சொல்லி முடித்தால், எந்த அரசன் எங்களுக்குப் பரிசு வழங்கப் போகிறன். உரிமைபெற்ற நாட்டில் எல்லோரும் இந்நாட்டு மன்னராய்விட்டீர்கள்! உங்களில் ஒருவர்கூட அரைக்காசு தரமாட்டீர்கள் என்பதை நன்ருக அறிவோம். ஆதலினலே எங்கள் சிற்றறிவுக்கு எட்டியவரையில் கற்றறிவுக்குக் கிட்டிய முறையில் நம் தெய்வப்புலவரின் திருக்கதையைத் தெளிவாகப் புதுவகையில் புனைந்து சொல்லப் போகிறேம். கேளுங்கள்!

## பாட்டு

நாடுநல்ல செல்வநாடு நாவலர்கள் புகழும்நாடு
தேடுகல்வி பொங்குநாடு தெய்வமணம் தங்கும்நாடு
மலைவளம் சிறந்தநாடு கலைவளம் நிறைந்தநாடு
புலவர்கள் மிகுந்தநாடு புண்ணியம் செறிந்தநாடு
பொதியமலை நிலவும்நாடு பொருநைநதி உலவும்நாடு
புதுமைகள் ஓங்குநாடு புங்கவர் வணங்கும்நாடு
பாண்டியர் சேரர்சோழர் ஆண்டநம் பண்டைநாடு
பூண்டதவர் மிக்கநாடு பொன்மணி கொழிக்கும்நாடு
வேங்கடம் ஓங்கும்நாடு வேல்வீரர் மிக்கநாடு
பாங்கான இனியதமிழ் பசுந்தேன் அனையதமிழ்
கற்றவர் மெச்சுதமிழ் நற்றவர் நச்சுதமிழ்
மற்றவர் மகிழுதமிழ் மன்னர் வளர்த்ததமிழ்
வள்ளல்கள் காத்ததமிழ் தெள்ளமுது அன்னதமிழ்
உள்ளத்தைக்கொள்ளுதமிழ் கள்ளத்தைத் தள்ளுதமிழ்
இயலிசை நாடகமாம் முத்தமிழ் இயங்குநாடு
நயங்கள் நிறைந்தநாடு நற்றமிழ் பெற்றநாடு.

## வசனம்

இத்தகைய தமிழ்நாட்டிலே நடுநாயகமாய்த் திகழ்வது நல்ல தமிழ் வழங்கும் பாண்டிநாடு. "பாண்டிய! நின் நாடுடைத்து நல்ல தமிழ்" என்று பாராட்டினர் அவ்வை மூதாட்டியார். இத்தகைய பாண்டிநாடு முத்துச் செல்வத்தில் சிறந்து விளங்கியது. பாண்டி நாட்டு முத்துக்கள் பாரிலுள்ள நாடெல்லாம் பரந்து சென்றன. மற்றைய நாட்டு மன்னர் முடிமீதும் மாதர் அணிமீதும் அம் முத்துக்கள் அணிசெய்தன. அத்தகைய விலையுயர்ந்த முத்துக்கள் பாண்டிநாட்டுக் கொற்கைத்துறையிலும் குமரித்துறையிலும் குளித்து எடுக்கப்பெற்றன. ஒரே

பாட்டில் தமிழ்நாட்டின் தனிப்பெருமைகளைக் காட்டப் புகுந்த தமிழ்மூதாட்டியாராகிய அவ்வையார்,

பாட்டு

"வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து"

என்று பாடியருளினர். பூழியர்கோன் பாண்டியன். அவனுடைய தென்னாடு முத்துடைத்து என்று சித்தங் குளிர்ந்து போற்றினர். அத்தகைய முத்துக்கொழிக்கும் பாண்டிநாட்டின் பழமையான தலைநகரம் மதுரைமாநகரம்.

மதுரை! ஆகா! என்ன அழகான பெயர்! மதுரம் நிறைந்த நகரம் அது! முன்னெழுத்தை எடுத்துவிட்டால் துரை! பின்னெழுத்தை எடுத்துவிட்டால் மது! மது—தேன்—அமுதம். துரை—செல்வன். மதுரையில் உள்ளார் எல்லாம் அமுதுண்ட செல்வர்போல அகங்களித்துத் திகழ்வார் போலும்.

இந்த மதுரையைத் தமிழ் மதுரை என்றே புலவர்கள் தலைக்கொண்டு போற்றுவார்கள். ஏன்? பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தது இத் தூங்க மதுரைமாநகரில் அல்லவா! இந்நகரை யடுத்து,

"புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்னும் பொய்யாக் குலக்கொடி."

என்று இளங்கோவடிகள் உளங்கொண்டு போற்றிய வையையாறு பாய்ந்து செல்லுகிறது. இந்த வையையாறு செந்தமிழின் தீஞ்சுவையைக் கண்ட பேராறு ஆகும். இவ்

வையையாற்றின் கரையில் அமைந்த சிற்றூர் ஒன்றிலே நம் தமிழ்நாடு செய்த நற்றவப் பயனாய்த் தெய்வப்புலவராகிய திருவள்ளுவர் அவதரித்தருளினர்.

## பாட்டு

தமிழ் நாட்டின் மேற்றிசை யதனில்
சார்ந்தொளிர் மலைத்தொடர்க ளிடையே
அமைந்துள்ள நாஞ்சில்மலை யதனை
அரசன்வள் ளுவனொருவன் ஆண்டான்
அன்னவன் நாஞ்சில்வள் ளுவனும்
அறமிகும் உள்ளத்தை யுடையான்
மன்னவன் அருளொழுகு கண்ணன்
மறமிக்க திண்டோள்கள் கொண்டான்
என்றவனை அவ்வை புகழ்ந்தார்
இத்தகைய நாஞ்சில்வள் ளுவனின்
வன்றிறல் மரபிலே வந்தார்
வள்ளுவக் குடியினர் என்பார்
வள்ளுவர் வண்மைமிகு மன்னர்
மாண்புற்ற நற்குடியில் ஒருவர்
தெள்ளுதமிழ் மதுரையைச் சார்ந்தார்
சேர்வையைக் கரையூரில் வாழ்ந்தார்.
பல்லோரும் சொல்பகவன் என்பார்
பாவையவர் ஆவியனை யாளாம்
நல்லார்கள் ஏத்துஆதி என்பாள்
நங்கையவள் மங்கையர்க் கரசி
கற்றவர்கள் போற்றுகற் பரசி
கட்டழகு மிக்கபொற் பரசி
பற்றுமிகும் இல்லறம் கொண்டார்
பார்புகழ் நல்லறம் செய்தார்

அன்னவர்கள் செய்தவம் தானே
அரியதமிழ் நாடுபுரி தவமோ
மன்னவர்கள் பண்ணுபுண் ணியமோ
மாநிலம் செய்தநல் வினையோ

தெய்வக் குழந்தையினைப் பெற்றார்
செய்தநல் வினைப்பயன் உற்றார்
வையகப் பேரொளியைக் கண்டார்
வானமுத நீதிமலை யுண்டார்
நாடெங்கும் மழைபொழியக் கண்டார்
நல்லார்தம் அவதாரம் என்றார்
கேடெலாம் ஒழியுமென விண்டார்
கிளர்ந்துவளம் பொங்குமெனக் கண்டார்

தெய்வப் புலவரவ தாரம்
தேர்ந்ததமிழ் வாணர்க்கோர் சாரம்
பொய்ம்மைகள் போக்குமுப காரம்
புத்துணர்வை ஊட்டுமுயர் வீரம்

பெற்றோர்கள் பிள்ளையைப் பேணிப்
பேராத குடிப்பெயரை யிட்டார்
உற்றபெயர் வள்ளுவர்என் பதுவாம்
உவகைமிக நாள்தொறும் வளர்ந்தார்

குலவித்தை கல்லாமல் உணர்ந்தார்
கொழிதமிழ்ப் புலமைமிக நிறைந்தார்
பலவித்தை ஆய்ந்தாய்ந்து கற்றார்
பன்மொழிப் புலமைநலம் உற்றார்
ஆணிளஞ் சிங்கமென வந்தார்
ஆன்றபெரும் புலவரென நின்றார்
காணரிய இளமையெழில் கொண்டார்
காதல்கொள் பருவமதைக் கண்டார்

வள்ளுவரின் பேராற்றல் கண்டார்
வல்லாளன் நற்சான்றோன் என்றார்
கொள்ளுதவத் தாய்தந்தை கேட்டார்
குளிர்ந்துள்ளம் இன்பத்தில் ஆழ்ந்தார்.

வசனம்

ஒருவன் பெறத்தக்க செல்வங்களில் பிள்ளைச் செல்வமே பெறுதற்கரிய செல்வம். மற்றைய செல்வங்கள் எல்லாம் பெற்றிருந்தும் மக்கட் செல்வத்தைப் பெறாவிட்டால் ஒருவனது வாழ்நாள் பயனற்றதாகக் கழியும் என்று பாண்டியன் அறிவுடைநம்பி என்னும் பேரரசன் தனது பேரறிவால் கண்டு கூறினான்.

பாட்டு

"படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழுநாளே!"

(புறம். ௧அஅ)

வசனம்

என்பது அத் தமிழரசனின் அரிய பாடல். நம் தெய்வப்புலவராகிய திருவள்ளுவரும் தம் திருக்குறளில் மக்கட் பேறு என்று ஓரதிகாரம் வகுத்துள்ளார். அதில் மக்கட் செல்வத்தின் மிக்க பெருமையைத் தக்கவகையில் விளக்கியுள்ளார்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" (சுக)

என்பது அவர்தம் பொய்யாமொழி. மக்கட் செல்வத்தை யன்றிப் பிற செல்வங்களைத் தாம் மதிப்பதில்லை என்று அறுதியிட்டு உறுதிபெறச் சொல்லியுள்ளார். அவரே அப்பகுதியில்,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (சுகூ)

என்கிறார். தான் பெற்ற மகன் 'சான்றோன்' என்று மற்ற வர்கள் பாராட்டிக் கூறுவதைக் கேட்டால் தாய், தான் பெற்ற பொழுதைக் காட்டிலும் பெரு மகிழ்ச்சி கொள்ளு வாள் என்று சொல்லுகிறார். அங்ஙனமே நம் வள்ளுவ ரைச் சான்றோன் என்று ஆன்றோர்கள் அகமகிழ்ந்து போற்றக்கண்ட பெற்றோர் பேருவகையுற்றார்கள். ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோராக நம் வள்ளுவர் விளங்கிவரும் நாளில்—

### பாட்டு

சோறு மிகவுடைய சோழவள நாடதனில்
ஆறுகா வேரிசாரும் காவேரிப் பாக்கமதில்
ஆயிரம் ஏருடைய அரியவே ளாளர்செல்வம்
மேய பெரும்புகழான் மேலான சீலமுள்ளான்
மார்க்க சகாயன்அவன் மாதவர் சகாயனவன்
யார்க்கும் சகாயனவன் பார்க்குள்வே ளாண்தலைவன்
பன்னூறு வேலிநிலம் பொன்னூறப் பேணிவந்தான்
அந்நிலத்தைச் சின்னாளாய் வேதாளம் அழித்ததையோ!
யார்செய்த தீவினையோ! பார்செய்த தீவினையோ!
சீர்மிக்க சோழநாடு சீரழிந்து கெட்டதையோ!
நாட்டில் பெரும்பஞ்சம் கொஞ்சமல்ல வாட்டியதே!

ஏட்டில் எழுதவொண்ணு இன்னல்மிக வீட்டியதே!
வேதாளம் தனையடக்கி வெற்றிகொள்ள வல்லார்க்கு
மாதர்க் கரசியவள் வாசுகியாம் தன்மகளை
கண்ணனைய பெண்ணணங்கைக் கற்புக் களஞ்சியத்தை
எண்ணரிய பேரழகை நண்ணரிய நன்னிதியை
மணந்து கொடுத்திடுவேன் மகிழ்ந்து கொடுத்திடுவேன்
இணைந்து செயல்புரிய ஏற்றவர்கள் வந்திடலாம்
என்று பறையறையும் நாடெங்கும் என்றுரைத்தான்
பறையறைந்து சொன்னமொழி நிறைந்தபுல வர்கேட்டார்
மறைவல்ல நற்புலவர் மகிழ்ந்துபறை மொழிகேட்டார்
வேதாளம் தனையடக்கி வெற்றிநான் கண்டிடுவேன்
தீதுமிக்க பஞ்சமதைத் தீரவே ஓட்டிடுவேன்
என்றுறுதி கொண்டுதிரு வள்ளுவரும் சென்றிட்டார்
அன்றவரைக் கண்டவர்கள் அதிசயித்து நின்றிட்டார்
பெற்ருேர்கள் தம்மிடத்தே பிரியவிடை கொண்டிட்டார்
அற்ருேர் அருநிதியம் உற்றதுபோல் உவந்தவர்கள்
பிள்ளையாம் வள்ளுவரைப் பிரியநனி வருந்தியிட்டார்
தள்ளரிய மந்திரரும் தாங்கரிய தந்திரரும்
ஆற்றல் மிகுந்தவரும் ஆற்றல் மிகும்தவரும்
ஏற்றெதிரே தோற்றிட்டார் இறந்தார்கள் பல்லோரும்
அத்தகைய வேதாளம் அதனைநீ எதிர்க்கவேண்டாம்
வித்தகத்தைக் கொண்டங்கே வியக்கநீ காட்டவேண்டாம்
பிள்ளைக் கனியமுதே வள்ளுவனே தெள்ளமுதே
உள்ளங் குளிரவந்த ஒப்பரிய நற்பொருளே
இன்னபல அன்புமொழி இயம்பிவிடை மறுத்தார்கள்
மன்னுதவ வள்ளுவரோ மனந்தேற்றிப் புறப்பட்டார்
காவேரிப் பாக்கமதைக் கடிதினிலே அடைந்திட்டார்
நாவலர்க்கு நாயகத்தைப் பாவலர்க்குத் தாயகத்தை
முன்னோர் பெருந்தவத்தை முத்தமிழின் வித்தகரை

கன்னூர் உரிக்கவல்ல கற்றபெரு நற்றவரை
ஞானத்தின் பேருருவாய் ஞாலத்தின் பேரொளியாய்
வானத்து நல்லமுதாய் வந்ததவ வள்ளுவரைப்
பார்த்தோர் வணங்கிநின்றூர் பக்கம் ஒதுங்கிநின்றூர்
ஆர்த்தார் அனைவோரும் ஆரவா ரித்துநின்றூர்
வேதாளம் அழிந்ததையோ! வெந்துசாம்ப ரானதையோ!
மாதாளும் பாகரவர் மாநிலத்தில் வந்துவிட்டார்
சங்கார மூர்த்தியவர் சங்கரிக்க வந்துவிட்டார்
நங்கையவள் கைப்பிடிக்கும் நாதரவர் வந்துவிட்டார்
நாட்டினது பஞ்சமெல்லாம் ஓட்டிடவே வந்துவிட்டார்
கேட்டார் மகிழ்ந்திடவே கேடொழிக்க வந்துவிட்டார்
சிந்தை குளிர்ந்திடவே வந்துவிட்டார் மாமுனிவர்
எந்தம் கலியெல்லாம் இன்றோடு ஒழிந்ததென்றூர்
மார்க்க சகாயரவர் மக்களொலி கேட்டிட்டார்
ஆர்க்குமப் பேரொலியோ அளவில்லா திருந்ததையோ!
மாளிகை விட்டிறங்கி மாதவரைக் கண்டிட்டார்
வாளொளி வீசிநின்ற வள்ளுவரைக் கண்டிட்டார்
பேரருள் பொங்கநின்ற பெம்மானைக் கண்டிட்டார்
வாரீர்! வா ரீரையோ! பேரருள் புரியுமையா!
என்றெதிரே சென்றவரின் இணையடியில் வீழ்ந்திட்டார்
நன்றெதிரே கொண்டவரை முகமன் நவின்றிட்டார்
வாழ்க! வாழ்க!வென வாழ்த்தியிட்டார் வள்ளுவரும்
ஆழ்க! தீயதென அறைந்திட்டார் வள்ளுவரும்
வள்ளுவர் மலரடியை மங்கலநீ ராற்கழுவித்
தெள்ளமுதை யூட்டியவர் சிந்தை களித்திட்டார்
வேதாளக் கொடுமையதை விளக்கி உரைத்திட்டார்
மாதாள வந்தஎங்கள் மாதவமே நீரென்றூர்
தெய்வப் புலவரவர் திருவுள்ளந் தான்இரங்கி
உய்வைத் தரும்அருளை உள்ளத்தில் கொண்டெழுந்து

நன்னகரைச் சூழ்ந்துள்ள நன்செய் நிலங்கண்டார்
செந்நெல் பயிர்களங்கே செழித்திருக்கத் தான்கண்டார்
வேதாளம் வரும்வேளை விரைந்தணுகி விட்டதென்றார்
தீதில் இறைவனருள் சிந்தனையில் கொண்டுநின்றார்
பொங்கிவருங்கடல்போல் புக்கபெரு நெருப்பைப்போல்
தங்குமத வெங்களிறு தாவிப் பிளிறிடல்போல்
ஓலமிட்டுப் பாய்ந்துவரும் காலவே தாளமதைச்
சீலநிறை வள்ளுவரும் சினமிகவே நோக்கியிட்டார்
கதிரவனைக் கண்டிடலும் கடும்பனி மறைந்திடல்போல்
அதிவிரைவில் வேதாளம் அங்கழிந்து மாய்ந்ததையோ!
நடந்தபெரு மலையொன்று இடிந்துமே விழுந்ததுபோல்
மடிந்து விழுந்ததையோ! அடியோடே ஒழிந்ததையோ!
வேளாண் தலைவரவர் வெந்துயர் ஒழிந்ததையோ!
கேளிர் துயரமெல்லாம் கெட்டொழிந்துவிட்டதையோ!
சோறூட்டுத் தொல்லையெல்லாம் அன்றே தொலைந்த
[தையோ!
காணரிய செல்வர்மனம் களித்துத் திளைத்ததையோ!
மனமகிழ்ச்சி கொண்டதவ மார்க்க சகாயரவர்
பணிவோடு வள்ளுவரின் பாதம் பணிந்துநின்றார்
எங்களின் உள்ளமெல்லாம் இன்பவெள்ளம் மூழ்கிடவே
மங்கையர்க் கரசியவள் மா தவப் புதல்வியவள்
வாசுகி யம்மையெனும் தேசுடைய காரிகையை
மாசில் தவத்தாளை மகிழ்ந்துமணம் கொள்ளுமென்றார்
வாசுகியைத் தாமணக்க வள்ளுவர் ஒன்றுசொன்னார்
பாசமொடு தாமளிக்கும் பருமணலைச் சோறாக்கி
படைத்திட வேண்டுமென்றார் பத்தியைக் காண்டுமென்றார்
உடைப்பெருங் கற்புடையாள் உத்தமக் கன்னியவள்
அப்படியே சோறாக்கி ஒப்புறவே படைத்திட்டாள்
செப்பரிய கற்புடையாள் ஒப்பரிய பொற்புடையாள்

மணலினைச் சோருக்கி மனங்கொள்ளப் படைத்திட்டாள்
வள்ளுவனுர் திருவருளால் மணலரிசி ஆகியதே
இணையிலாக் குணமுடைய எழிலாளின் உயர்வுகண்டார்
காதல் மிகவுடைய கன்னியவள் சீர்கண்டார்
தீதில் திருமணத்தைச் செய்வோம் விரைவிலென்ருர்
வள்ளுவர்க்கும் வாசுகிக்கும் வளமான மணமுடித்தார்
தெள்ளமுதும் சுவையும்போல் சேர்ந்து குலவியிட்டார்
பொன்னும் ஒளியும்போல் பொருந்தி மருவியிட்டார்
மன்னும் மனையறத்தை மகிழ்ந்து புரியுமென்ருர்
பெண்டிர்க் கரசியவள் பெருந்தக்க வாசுகியாள்
தண்டமிழ் வள்ளுவர்க்குத் தக்க துணைவியவள்
திருமயிலை தாம்சென்று சிறுமனை யமைத்திட்டார்
அரிய மனையறத்தை அழகுறவே நடத்தியிட்டார்
வள்ளுவர் இல்லறத்தை வந்துகண்ட மக்களெல்லாம்
உள்ளுவகை கொண்டுநின்ருர் உள்ளமுற வாழ்த்திநின்ருர்
வாழ்வாங்கு வையத்தே வாழும்வகை யீதென்ருர்
தாழ்வில் வழிகாட்டி தாரணிக்கே இவரென்ருர்.

வசனம்

இங்ஙனம் மயிலாப்பூரில் வள்ளுவர், தம் கருத்தொரு மித்த காதல் மனைவியாகிய வாசுகியம்மையோடு இல்லறமாம் நல்லறத்தை இனிது நடத்தி வரும் நாளில், காட்டில் கடுந்தவம் செய்துகொண்டிருந்த கொங்கணன் என்னும் தவமுனிவன் ஒருநாள் வள்ளுவர் வீட்டை யடைந்தான். வாசலில் நின்றுகொண்டே, "அம்மா! சோறிடுக!" என்று கூவினன். கணவர்க்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த கற்புமிக்க வாசுகியார், பணிவிடை முடித்துச் சற்றே காலந்தாழ்த்துக் கையில் சோறுகொண்டு வாசலுக்கு வந்தார். அங்கு நின்ற முனிவன், காலந்

தாழ்த்தமைக்காகக் கடுங்கோபம் கொண்டவனுய்க் கண்களில் கோபக்கனல் சிந்த நிமிர்ந்து நோக்கினுன். அது கண்ட வாசுகியார், "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா!" என்று கேட்டுக்கொண்டே வீட்டுள் சென்றுர். பெண்ணின் வார்த்தையைக் கேட்ட பெருந்தவ முனிவன் பெரிதும் திடுக்கிட்டான். என்ன வியப்பு! நம் பெயர் கொங்கணன் என்பதை எவரும் அறியாரே! இவள் எப்படி அறிந்தாள்? மேலும் நாம் காட்டில் மரத்தடியில் தவம் செய்யும் தனியிடத்தில் நம்மீது மரத்திலிருந்து எச்சமிட்ட கொக்கை ஏறெடுத்துப் பார்த்தோம். அது சாம்பலாயிற்று. அந்தச் செய்தியை எந்த மனிதனும் அறிந்ததில்லையே. இந்தப் பெண் வீட்டில் இருந்தவண்ணம் அந்தச் செய்தியைத் தெரிந்துவிட்டாளே! எல்லாம் அவளது கற்பின் வல்லமை போலும்! 'பெண்களது கற்பின் முன்னுல் பெருந்தவமும் நில்லாது போலும்' என்று வியந்து, இத்தகைய பெண்ணின் கணவனைக் கண்டு மகிழவேண்டும் என்று அங்கேயே நின்றுகொண்டிருந்தான். சற்று நேரத்தில் வெளியே வந்த வள்ளுவர்பெருமானை நோக்கி கொங்கணமுனிவன், "இல்லறம் சிறந்ததா? துறவறம் சிறந்ததா?" என்று கேட்டான். வள்ளுவர், நம் இல்லத்தில் சின்னுள் தங்கி அந்த உண்மையை நேராகவே நீராகவே கண்டு செல்லும் என்று சொல்லியருளினுர். வள்ளுவரின் விருப்பப்படி அவரது இல்லத்தில் சின்னுள் தங்கிய கொங்கணன், "கற்புடைய இல்லாள் வாய்த்தால் இல்லறமே ஏற்றமானது," என்று தேர்ந்து கூறினுன். அப்போது நம் தெய்வப்புலவராகிய திருவள்ளுவர் பெருமான் சொல்லியருளிய நல்லமுத மொழியே,

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை ; அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று." (சக)

என்பதாகும். இதனையே அறிவுச்செல்வியாகிய அவ்வையும்,

"இல்லறம் அல்லது நல்லறம் அன்று."

என்று சுருக்கமாகச் சொல்லிச் சென்றார்.

பாட்டு

முனிவர் வியக்கும் தனியறம் கொண்டார்
கனியும் அன்பினை இனிது வளர்த்தார்
விருந்தினை ஓம்பி மருந்தும் ஊட்டினார்
பொருளையும் அருளையும் பொருந்தப் போற்றினார்
இன்சொல் கூறிச்செய்ந் நன்றி பேணினார்
புன்மை போக்கிநன் நடுநிலை போற்றினார்
அடக்கம் ஒழுக்கம் அரிய பொறைக்குணம்
அழுக்கா றுமை அயல்மனை நோக்காமை
வெஃகா மைபுறங் கூறா மைநலம்
பயனில சொல்லாமை நயனில செய்யாமை
ஒப்புர வறிதல் உயரீகை புரிதல்
திப்பிய புகழ்நலம் தேடி நாடுதல்
இத்தகு நல்லறம் இனிய பண்புகள்
மெத்தவும் கொண்டார் மேன்மை இல்லறம்
சிறக்க ஆற்றினார் செய்ய வள்ளுவர்
துறக்க வேண்டுமோ ? தூய்மை கொள்ளுவார் !
அன்பின் அடிப்படை அமைக்கும் மாளிகை
இன்ப மனையறம் அன்பு கனியறம்.

வசனம்

வள்ளுவரின் இல்லறத்தை வையத்துமக்களே அன்றி, வானத்துத் தேவரும் காணவேண்டும் என்று இறைவன் திருவுள்ளம் கொண்டான். திருவாலங்காட்டிற்குத்

தேவரெல்லாம் வருமாறு பணித்தான். தேவர்கள் காணத் தானும் காளியுடன் தனிப் பெருங்கூத்தினை வியப்புற ஆடினான். சிவனும் காளியும் சேர்ந்து நடஞ்செய்யும் சிறந்த காட்சியைத் தேவர்கள் நாட்டமெல்லாம் ஒருங்கு செலுத்திப் பரவசராய்ப் பார்த்து நின்றார்கள். நீண்ட நேரத்திற்குப் பின்னர் ஆண்டவன் தாண்டவம் நிறைவுற்றது. ஆடிய இருவருள் யார் வென்றார்? யார் தோற்றார்? என்று கண்டுகூற, அங்கு நின்ற தேவர் எவராலும் இயலவில்லை. அதுகண்ட சிவன், "மயிலை வள்ளுவன்பால் சென்று உண்மை யுணர்ந்து வாருங்கள்," என்று உத்திரவிட் டருளினான். தேவரெல்லாம் புறப்பட்டுத் திருமயிலை அடைந்து, வள்ளுவர் இல்லம் புகுந்தார்கள். அவர்பால், "திருவாலங்காட்டில் நடைபெற்ற சிவகாளி நடனத்தில் வென்றவர் யார் என்று கண்டு கூறவேண்டும்," என வேண்டினார்கள். அதற்குப் பதில்கூறப்புகுந்த தெய்வப்புலவர், தேவர்கள் யாவரும் அந்நடனக் காட்சியை நேரே நின்று கண்டிருக்க, இங்கிருக்கும் ஏழை அறிவேனோ? என்று சொல்லிய மொழியிலேயே, சிவன் ஆடிய ஊர்த்துவத்தாண்டவத்தின் உண்மையைப் புலப்படுத்தியது கண்ட தேவர்கள், "ஆகா! என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!" என்று வியந்தார்கள்.

வள்ளுவர், தேவர்க்குக் கூறிய பதில் ஒரு பாட்டாக அமைந்துள்ளது. அதைக் கேட்டு மகிழுங்கள்.

பாட்டு

பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூல்நெருடும் ஏழையறி வேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து

வசனம்

இந்தப் பாட்டில் "குழைக்கும் பிள்ளைகள் றன் கூத்து" என்ற அடியால் தேவர்கள் ஐயத்தைத் தெளிவுறுத்தினர். சிவன் ஆடும்போதே, தன் செவியிலணிந்துள்ள குண்டலத்தைக் காலால் கழற்றிக் கீழே விசினன். ஆடியவண்ணமாகவே கால்விரல்களால் விழுந்த குண்டலத்தைத் திரும்பவும் எடுத்து, ஒரு காலை நேரே உச்சியில் தூக்கியாடும் ஊர்த்துவத் தாண்டவமாடிக் காதில் அணிந்து கொண்டான். இத்தகைய வித்தையைக் காளி, பெண்ணாதலினாலே விண்ணவர் முன்னிலையில் பண்ணமுடியவில்லை. ஆட்டத்தில் தோற்று நாணிக்கோணி விலகி நின்றாள். இந்த உண்மையைத் திருமயிலையில் இருந்தவண்ணமே தெரிந்து கூறிய தெய்வப்புலவரின் திறத்தைத் தேவர்கள் வியந்து, "நீர் இதனை எங்ஙனம் தெரிந்தீர்?" என்று கேட்டனர். அப்போது பாடினார் நம் ஒப்பற்ற பெரும்புலவர்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்." (௫0)

என்று. இல்லறத்தைப் பல்லோர்க்கும் பயன்தரும் நல்லறமாக நடாத்தி வாழவேண்டிய முறைப்படி வாழ்பவன் வையத்தானேயாயினும் வானவரினும் மேலானவன் என்ற உயர்ந்த உண்மையை ஓதியருளினர். இத்தகைய வள்ளுவர் பெருமான்,

பாட்டு

இல்லறம் நடத்தும் வேளையிலே
இல்லத்தில் நிகழ்ந்த செயல்களிலே
சொல்லரும் வியப்பைத் தருமவற்றைச்
சொல்லுவேன் கேளுங்கள் நல்லோர்களே !

ஒருநாளில் உத்தமப் பத்தினியாள்
ஒப்பற்ற வாசுகி உத்தமியாள்
பெருமைகொள் கணவர்க்குப் பழஞ்சோற்றைப்
பேரிலை யதனிலே படைத்திட்டாள்
உணவினில் கைவைத்த கணவரவர்
உணவிது சுடுகுது விசிறிகொணர்
எனவுரை கூறிட வாசுகியும்
எடுத்து விசிறியால் விசிறியிட்டார்
சோற்றினில் வெப்பாவி தோன்றிடவே
தோகையும் ஓகை மிகக்கொண்டார்
ஆற்றல்கொள் வள்ளுவ அண்ணல்தாமும்
அளவிலா மகிழ்ச்சி யடைந்திட்டார்.

வசனம்

இந்தக் காலத்தில் எந்தப் பெண்ணாவது, தன் கணவனுக்கு இலையிலே பழைய சோற்றைப் படைத்து விட்டுச், 'சோறு சுடுகின்றது, விசிறி கொண்டு வீசுக!' என்று கணவன் சொல்வானானால் என்ன செய்வாள்? என்ன செய்வாள் தெரியுமா? அந்தப் பெண், கணவ னிடத்துக் கொஞ்சம் உண்மையான அன்பையுடைய பேதை நெஞ்சம் படைத்தவளாக இருந்தால், "ஐயையோ! என் கணவனுக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டதுபோலிருக் கிறதே! சித்தம் கலங்கிவிட்டதே! என்ன செய்வேன்! எவரிடம் சொல்வேன்! எங்கே போவேன்!" என்று கதறிப் பதறிப் புலம்பியழத் தொடங்கிவிடுவாள். கொஞ்சம் வன்னெஞ்சம் படைத்த வனிதையாக இருப்பாளானால் அவ்வளவுதான்,

'சண்டாளி சூர்ப்பணகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளாய்'

கணவனை நோக்கி, "ஐயா! உமக்கு எப்படி வருகிறது?" என்று ஓர் அதட்டு அதட்டிவிடுவாள். பிறகு கணவர் பேசுவதெங்கே? சந்திரனைக்கண்ட மின்மினிப் பூச்சியைப் போல, ஐயர் மெய்யெல்லாம் ஒடுங்கி மேனியெல்லாம் சுருங்கிப் போய்விடுவார்.

வள்ளுவர் வாழ்க்கையில் நடந்த மற்றொரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

பாட்டு

செய்யுந் தொழில்களி னுள்ளே
சிறந்த தொழிலென்று செப்பும்
நெய்யுந் தொழிலை வள்ளுவரும்
நிதமும் புரிந்துவந் திட்டார்
ஒருநாள் அவர்நெய்யும் வேளை
ஒளிமிக்க பகல்வேளை யதனில்
மருவும் குழல்கீழே விழவே
வாசுகி தனையழைத் திட்டார்
நீரினைக் கிணற்றில் இறைக்கும்
நேரிழை காதில்ஒலி விழவே
வாரிய நீர்க்குடக் கயிற்றை
இடையிலே நிறுத்தி வந்திட்டார்
விழுந்திட்ட குழலினை எடுக்க
விளக்கொளி கொணர்ந்திடுக என்று
தொழுந்தெய்வக் கணவரவர் சொல்லச்
சுடர்விளக் கதுகொண்டு வந்தார்
வாசுகியின் நேசமும் கற்பும்
வள்ளுவர் தினமுங்கண் டுவந்தார்
தேசுடைய அவள்குணம் கண்டு
தெய்வநலம் மிக்காள்என் றுவந்தார்

மீண்டும் கிணற்றை யடைந்த
மேதக்க வாசுகி வியந்தார்
நீண்ட கயிற்றோடு குடமும்
நேராக இடைநிற்றல் கண்டார்
குடந்தூக்கி வீட்டை அடைந்தார்
கொண்டநற் கணவர்க் குரைத்தார்
நடந்த நிகழ்ச்சியை அறிந்த
நாயனார் அருளியதை உரைப்பாம்.

வசனம்

வள்ளுவர், தம் வாழ்க்கைத்துணைவியாகிய வாசுகியை நோக்கி, "பெண்மணே! பிற தெய்வ உருவங்களைப் பேணி வணங்கவேண்டா. கொண்ட கணவனையே கண்கண்ட தெய்வ உருவமாகப் பெண்டிர் வணங்கி எழுவாராயின், அவர்கள் ஆணையிட்டால் வானமும் மழையைப் பொழியும். அப்படியிருக்கக் கற்புடைய உனக்கு இச்செயல் ஓர் அருமை வாய்ந்ததோ!" என்று பாராட்டி,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை." (௫௫)

என்ற பொய்யாத மொழியொன்றைப் புகன்றருளினார்.

இங்ஙனம் வள்ளுவர் தம் வாழ்வில் காணும் அரிய அனுபவ உண்மைகளெல்லாம் உலகிற்குப் பயன்தர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தால் அவ்வப்போது அழகிய குறள்வெண்பாவில் அமைத்து ஏட்டில் எழுதிக்கொண்டே வந்தார். அங்ஙனம் செய்துவரும் நாளில் வள்ளுவர்க்கு ஆண்குழந்தை யொன்று பிறந்தது. அக் குழந்தையைக் கையால் தூக்கி மெய்யோடணைத்து, மழலைமொழி கேட்டு அளவற்ற இன்பம் அடைந்தார். அந்த இன்பத்தில் திளைத்த வள்ளுவர்,

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" (சுரு)

என்று தமது அனுபவத்தை அரிய குறட்பாவில் அமைத்துக் கூறியருளினர். "தம் மக்களின் மழலைச்சொல்லைக் கேட்டு மகிழாத பெற்றோரே யாழிசையும் குழலிசையும் இன்பமானவை என்பார்கள். மற்றவர் குழந்தையின் மழலைச்சொல்லே கொள்ளை கொள்ளையான இன்பம் தர வல்லது என்பர்," என்று கூறினர் வள்ளுவர்.

எல்லையற்ற இன்பம் தரவல்ல மக்கட்செல்வத்தின் மாண்பினை நன்றாக அனுபவத்தில் கண்டறிந்த நாயனர்,

"பெறும்அவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" (சுக)

என்று சொல்லியருளினர். மக்கட் செல்வத்தை யன்றிப் பிற செல்வங்களைத் தாம் மதிப்பதில்லை என்றே உறுதி தோன்ற உரைத்துவிட்டார்.

ஒருசமயம் அறிஞர் பலர், வள்ளுவரையணுகிப், "புலவர் பெருமானே! உலகில் உள்ள அறநூல்கள் எல்லாம் ஒருங்கு கூறும் உயர்ந்த அறம் யாது?" என்று வினவினர். உலகிலுள்ள மெய்ந்நூல்கள் அத்தனையும் ஓதாதே ஓதியுணர்ந்த வள்ளுவர் பெருமான்,

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" (௩00)

என்று சொல்லியருளினர். நான் கண்ட அறநூல்களில் வாய்மையைப்போல் எவ்வகையிலும் சிறந்த அறம் வேறொன்றில்லை என்றே சொல்லக் கண்டிருக்கிறேன். ஆனல் எனக்கு அது உடன்பாடில்லை. ஏனென்றால் நன்மையைத் தருமாயின் பொய்யும் மெய்யாயும், தீமையைத் தருமாயின் மெய்யும் பொய்யாயும் மாறுகின்ற இயல்பைக்

காண்கிறோம். ஆதலின் அந்த வாய்மை தலைசிறந்த அறமாகாது. கொல்லாமை யென்னும் நல்லறமே இந்தக் குவலயத்தில் தலைசிறந்த ஒப்புயர்வற்ற பேரறமாகும் என்று கூறியருளினார்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று" (கூஉகூ)

என்று தாம் ஆய்ந்துகண்ட அரிய முடிபைச் சிறிய குறட்பாவால் செப்பியருளினார்.

ஒருநாள் வள்ளுவர் தம் முதல்மாணவராகிய ஏலேல சிங்கர் என்பாருடன் வீதியில் சென்றுகொண்டிருந்தார். வழியில் அங்கமெல்லாம் குறைந்து அழுகு தொழு நோயாளன் — குட்டநோயாளன் ஒருவன் வறுமையால் வாடிக், கண்கொண்டு பார்க்கமுடியாத கோரக்காட்சியொடு காணப்பட்டான். ஏலேலசிங்கர் அவனை வள்ளுவர் பெருமானுக்குக் காட்டி, "ஆசிரியர் பெருமானே! இத் தொழுநோயாளன் இத்தனை பெருந்துன்பம் அடைதற்குக் காரணம் யாதோ? சொல்லி யருளவேண்டும்," என்று வேண்டினார்.

அதற்கு வள்ளுவர், "இவர்கள் எல்லாம் முற்பிறப்பில் எண்ணற்ற உயிர்களைக்கொன்று அவற்றின் உடலையுண்டவர்கள்; கொலையும் புலையும் புரிந்த கொடிய பாவத்தால் இக் கொடுநோய்க்கு ஆளானார்கள்," என்று கூறி,

"உயிருடம்பின் நீக்கியா ரென்ப, செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்" (உருஅ)

என்றும் பாடியருளினார்.

இங்ஙனம் வள்ளுவர் பல்வேறு சமயங்களில் தாம் கண்டு பாடிய அநுபவ உண்மைகளையும், ஆராய்ந்து தெளிந்த அரிய நுண்ணிய கருத்துக்களையும் ஒன்றுசேர்த்துக்

கோத்துத் திருக்குறள் என்னும் அரிய நூலைத் தொகுத்தார். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் அடங்கிய அரிய அழகிய நூலைக் கண்டாரெல்லாம் கொண்டாடினார்கள். பாண்டியன் அமைத்துள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கொண்டுசென்று அந்நூலை அரங்கேற்றுமாறு அன்புடன் வேண்டினார்கள். அதுகேட்ட வள்ளுவர், தமிழ் மதுரைக்குப் புறப்பட்டார்.

பாட்டு

பொய்யில் புலவரவர் புகன்ற பெருநூலை
மெய்யான தமிழ்மறையை மேலான நூலதனைத்
தென்னாட்டின் பொன்னேட்டை முன்னாட்டும் நன்னூலைப்
பொன்னான தங்கரத்தில் தாங்கிப் புறப்பட்டார்
மாமதுரை நோக்கி வழிநடக்க முற்பட்டார்
தேமதுரத் தீந்தமிழைப் பரப்பவே புறப்பட்டார்
காடு பலகடந்தார் காட்டாறு தாம் கடந்தார்
நாடு பலகடந்தார் நதிகள் பலகடந்தார்
செல்வ மதுரைநகர் சேரவே நடக்கின்றார்
செல்லும் இடமெல்லாம் சீராட்ட வருகின்றார்
தங்கும் இடமெல்லாம் தார்சூட்ட வருகின்றார்
எங்கு மகிழ்ந்தேத்த இன்பமுடன் வருகின்றார்
வையைக் கரையடைந்து வளமான துறைபடிந்து
செய்ய பரம்பொருளைச் சிந்தித்து வழிபட்டுப்
பாண்டியன் அமைத்த பழந்தமிழ்ச் சங்கமதை
ஈண்டியாம் சேர்ந்தே இனிதுரைக்க வேண்டுமென
நகருள் நுழைந்தவுடன் நல்லமழை பெய்ததையோ !
அகன்ற பெருவழியில் அடர்ந்துநின்ற ஆலமரம்
ஆல மரத்தின்கீழ் அந்தமழைக் கொதுங்கிவிட்டார்
சாலப் பெரும்புலவர் சங்கத் தரும்புலவர்

இடைக்கா டருமங்கே மழைக்கொ துங்கி நின்றிட்டார்
நடைப்பா வுயரேட்டை நற்கரத்தி லேந்திநின்ற
வள்ளுவரைப் பார்த்து வாரும்நீர் யார்? என்றார்
தெள்ளுதமிழ் நூலுரைத்த தெய்வப் பெரும்புலவர்
யானோர் புலவனையா! யான்செய்த நூலிதையா!
தேனார் தமிழ்மொழியில் தேர்ந்துரைத்த நூலையா!
நும்நூல் விளக்கியிடும் நுண்பொருள்தான் யாதையா!
என்றினிது கேட்டிட்ட இடைக்காட ருக்குரைப்பார்
வென்றியுடன் எல்லாம் விளக்கமுறச் சொல்லியுள்ளேன்
எல்லாப் பொருளும் இதன்கண்ணே சொல்லியுள்ளேன்
இல்லாத பொருளேதும் இவ்வுலகில் இல்லையென்றார்
இந்தமொழி கேட்ட இடைக்காடர் வியந்திட்டார்
விந்தை! அந்தநூற்பெயரை விளங்க உரையுமென்றார்
குறட்பாக் கொண்டமைத்த கூறுதமிழ் நூலிதற்குக்
குறளென்றே பேரைக் கொண்டமைத்தேன் என்று
[ரைத்தார்
நூலின் பெயர்குறளாம் நுவலும் பொருள்பெரிதாம்
நூலைச் சிறிதுகொடும் நுண்பொருளைக் கண்டிடுவேன்
பெற்றார் குறளேட்டைச் சற்றே நோக்கியிட்டார்
கற்ற இடைக்காடர் கருத்தோடு பார்த்திட்டார்
"கடுகைத் துளைத்தேழு கடலைப் புகட்டியன்றே
குறுகத் தறித்திட்ட குறளா" யிருக்குதென்றார்
செந்தமிழ் நூலிதைப்போல் இந்த உலகில்இல்லை
சந்தமிகும் இந்நூலைச் சங்கத்தில் காட்டிடுவோம்
தேரும் அரும்புலவீர்! வாரும் தமிழ்ச்சங்கம்
சாரும் புலவரெல்லாம் தேறயாம் கூறிடுவோம்
என்றுசொல்லி வள்ளுவரை இடைக்காடர் கூட்டிச்சென்றார்
நன்றுதமிழ்ச் சங்கத்தை அன்றே அடைந்திட்டார்
நாலுபத் தொன்பதுபேர் நாவலர்கள் விளங்கும்அந்தக்

கோலமுறு சங்கத்தில் கூறினர் வள்ளுவர்பேர்
குறள் நூல் பெருமையினைக் கூறி விளக்கியிட்டார்
திறமான இடைக்காடர் தேர்ந்துரைத்த வார்த்தையினைக்
கேட்ட பெரும்புலவோர் வேட்கைமிகக் கொண்டவராய்
நாட்டில் உயர் நூலை நல்ல குறள் நூலைச்
சங்கப் பலகையின்மேல் சாரவே வையுமென்றார்
துங்கப் புலவரையும் தோன்ற அமருமென்றார்
திருக்குறள் நூலுமதைத் தேர்ந்துரைத்த வள்ளுவரும்
இருக்கப் பலகையின்மேல் எவரும் இருக்கவில்லை
புலமை அளந்துகூறும் பொற்புடைய பலகையது
புலவர்திரு வள்ளுவர்க்கும் புகன்றகுறள் நூலுக்கும்
இடமளித்துப் பெருமையினை இனிதெடுத்துக் காட்டியது
திடமுடைய வள்ளுவரின் தெய்வப் புலமையினைக்
கண்டு வியந்திட்டார் தண்டமிழ் நூலிதனை
விண்டு பொருள்விளக்க வேண்டுமெனக் கேட்டிட்டார்
இசைந்ததிரு வள்ளுவரும் ஏற்றமுள்ள தந்நூலை
திசையெலாம் அறிவொளியைப் பரப்பும் திருக்குறளை
அரங்கேற்றத் தொடங்கிட்டார் அரும்புலவர் தாம்கேட்டார்
உரங்கொள் நூல் ஈதென்றார் உலகிலுயர் நூலிதென்றார்
ஞாலத்தில் நூலிதுபோல் நாம்கண்ட தில்லையென்றார்
சீலத்து வள்ளுவரோ தெய்வஅவ தாரமென்றார்
போற்றாத புலவரில்லை புகழாத மன்னரில்லை
ஆற்றல்மிகும் நூலிதனை அழகுதிருக் குறளென்றார்
கவிஞரெலாம் போற்றிக் கட்டுரைத்த பாக்கள்பல
புவியினுக்கோர் நல்அணியாய்த் திருக்குறள் போந்ததையா!

## வசனம்

அந்தத் தமிழ்ச்சங்கத்திலே சாத்தனார் என்னும் பெரும்புலவர் ஒருவர் இருந்தார். அவர் சீத்தலை என்ற

ஊரில் பிறந்து, செந்தமிழ் மதுரைமாநகருக்கு வந்து, கூலவாணிகம்—தானிய வியாபாரம் செய்துகொண்டிருந்த சிறந்த புலவராவர். அவர் மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் என்று கற்றோரும் மற்றோரும் சொல்லும் பெற்றியுடையவர். அவர், சங்கத்திற்கு அரங் கேறவரும் நூல்களையெல்லாம் கண்டு கண்டு மனமிரங்கி, "ஐயோ! எந்த நூலும் ஏதேனும் ஒரு குற்றம் உள்ளதாக வன்றோ உள்ளது; குற்றமற்ற நூலொன்றும் வரப் பெற்றோமில்லையே!" என்று தலையில் அடித்து அடித்துத் தீராத தலைவலி நோயால் போகாத துன்பம் பெற்றவராய் இருந்துவந்தார். இவருடைய தலைவலிக்குச் சங்கப்புலவருள் ஒருவராய் மருத்துவத்துறையில் பெருத்த புலமையுடையாராய் விளங்கிய மருத்துவன் தாமோதரனார் என்னும் தமிழ்ப்புலவர், தாம் ஆய்ந்துகண்ட தக்க மருந்தையெல்லாம் கொடுத்துப் பார்த்தார். அவர் தந்த மருந்தாலெல்லாம் தலைவலி தீரப்பெறாது தீராத துன்பத்துடன் சீத்தலைச்சாத்தனார் இருந்துவந்தார். திருவள்ளுவர் திருக்குறள் நூலை அரங்கேற்றியதும், "இன்றே யான் குற்றமற்ற ஒரு நூலைக் காணப்பெற்றேன்; இன்றோடு என் தலைவலி அறவே நீங்கியது," என்று அளவிலா மகிழ்ச்சியுடன் வள்ளுவரை வாயார வாழ்த்தினார். குறள் நூலை மனமாரக் கொண்டாடினார்.

பாட்டு

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

### வசனம்

என்று பாராட்டுப்பாமாலை சூட்டினர். சீத்தலைச் சாத்தனர் செப்பிய மொழிகளைக் கேட்ட மருத்துவன் தாமோதரனர் என்னும் புலவர் பெருமான், அச்சாத்தனர் சொல்லிய கருத்தையே அமைத்துக் கவிமாலை புனைந்து வள்ளுவர் பெருமானுக்கு அணிந்து மகிழ்ந்தார்.

### பாட்டு

சிந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

### வசனம்

என்பது தாமோதரனர் சூட்டிய தமிழ்ப்பாமாலை யாகும். இங்ஙனமே அங்கிருந்த சங்கப்புலவர் எல்லோரும் தத்தம் சித்தத்தெழுந்த செந்தமிழ்க் கருத்துக்களைச் சிறந்த பாமாலையாகத் தொடுத்து வள்ளுவர் பெருமானுக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள். சங்கப்புலவர் பலரும் வள்ளுவர்க்கு அணிந்து மகிழ்ந்த பாமாலையே திருவள்ளுவ மாலை யெனத் திகழ்கின்றது.

திருக்குறளின் பெருமையைத் தெரிந்த பரணர் என்னும் பாவலர் பெருமான், “பண்டைநாளில் திருமால் வாமனனய்—குறள்வடிவாய் வந்தருளித் தன் இரண்டு திருவடியால் உலகனைத்தும் அளந்துகொண்டான். இந்நாளில் பேரறிவாளராகிய வள்ளுவர் பெருமான் தம் குறள் வெண்பாவின் ஈரடியாலே வையத்தார் உள்ளுவன எல்லாம் ஓர்ந்தளந்து உரைத்தருளினர்,” என்று பாராட்டினர்.

## பாட்டு

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாம்அளந்தார் ஓர்ந்து.

## வசனம்

என்பது பரணர் சூட்டிய பாமாலையாகும். பின்னர், ஆங்கிருந்த மாங்குடி மருதனார் என்னும் பெரும்புலவர், "இத்திருக்குறள் ஓதற்கு எளியது; ஆனால் உட்பொதிந்த கருத்துக்களோ உணர்தற்கு அரியன; வேதப் பொருளாய் விளங்குவது; குற்றமற்ற உள்ளத்தோடு கூர்ந்து நோக்கு வார்க்கு நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் நெஞ் சத்தை உருக்குவதாகும்," என்று பாராட்டிப் பாடினார்.

## பாட்டு

ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

## வசனம்

என்பது மாங்குடிமருதனார், வள்ளுவர்க்குப் பாங் குறச் சூட்டிய பாமாலையாகும். திருக்குறள் நூல் முழுதை யும் உருக்கமாகக் கேட்டுக்கொண்டிருந்த நத்தத்தனார் என்னும் நாவலர், "இந்நூற்கணுள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறட்பாக்களையும் குற்றமறக் கற்றவன் மற்றவரிடம் சென்று கேட்கவேண்டிய நூலேயில்லை.

அவனே தன்னிகரில்லாத் தமிழ்ப்புலவனாகத் தாரணியில் வீறுபெற வீற்றிருக்கலாம்,'' என்று போற்றினர்.

பாட்டு

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவர்
ஆய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

வசனம்

என்பது நத்தத்தனர் அணிந்து மகிழ்ந்த நற்றமிழ்ப் பாமாலையாகும். திருக்குறளைத் திருவள்ளுவர் திருவாயால் சிந்தை இனிக்கச் செவியினிக்க வாயினிக்கக் கேட்ட கவிஞர் பெருமானாகிய கவுணியனர், "இந்த நூல் பிறவிப் பிணியை வேரோடு அறுக்கும் பெரிய அரிய மருந்து,'' எனப் பேணிப் போற்றினர். அவர் சூட்டிய பாமாலையை யும் கேட்டு மகிழுங்கள்.

பாட்டு

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

வசனம்

சங்கப்புலவருள்ளே தம் வாழ்நாள் முழுதும் தமிழ் மாணவனாகவே திகழவேண்டும் என உறுதி கொண்ட புலவர் ஒருவர் இருந்தார். அவர் பூதனர் என்னும் புலவர். அவர், கொடிஞாழல் என்ற ஊரில் பிறந்தவராகையால் அவரைக் கொடிஞாழல் மாணிபூதனர் என்று கூறுவார்கள். அவர், திருவள்ளுவர்வாயால் தெள்ளுதமிழ்க் குறள்

நூலைக் கேட்டதும் தாம் அறிந்து தெளிந்த அரிய உண்மைகளைச் சொல்லிப் பாராட்டினர். அறம் பொருள் இன்பம் என்ற மூன்றையும் வள்ளுவர் குறளைச் சொல்லும்போதே தெள்ளத் தெளியத் தெரிந்துகொண்டாராம் பூதனர். வீடு மட்டும் ஆய்ந்து தெளிந்துகொண்டாராம்.

பாட்டு

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம் வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு.

வசனம்

என்று, பூதனர் தாம் கண்ட உண்மையைத் திண்மையுறச் சொல்லிப் போயினர். இங்ஙனம் பல்லோரும் நல்லிசைப்பாமாலை சூட்டி, நாவலர் கோமானாகிய நாயனர் வள்ளுவரைப் பாராட்டுவது கண்ட பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதி யென்பான், நாடெங்கும் முரசறைந்து நற்செய்தி யொன்று சொல்லுமாறு ஆணையிட்டான். அந்த ஆணையைச் செந்தமிழ்ப்பாவாகவே பாடித்தந்தான். அதுவும் வள்ளுவர்க்கு அணிந்த பாமாலையாக நறுமணம் பரப்பி விளங்குகின்றது.

பாட்டு

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான் [முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன் [முறையை
வந்திக்க சென்னி! வாய் வாழ்த்துக! நன்னெஞ்சம்
சிந்திக்க! கேட்க செவி!

வசனம்

இங்ஙனம் உக்கிரப் பெருவழுதியின் ஆணையை யானை மீது முரசேற்றியறைந்து கூறக்கேட்ட நாட்டு மக்களெல்லாம் திருக்குறளைக் கற்கத்தொடங்கினார்கள். திருவள்ளுவரைத் தெய்வப்புலவரெனக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். தெய்வப்புலவர்க்குப் பாண்டிய மன்னன் வேண்டிய பரிசுகளை விழைந்து கொடுத்து வியந்து போற்றினான். முப்பால் தந்த ஒப்பில் புலவரை எப்பாலவரும் இனிது அறியுமாறு செய்தான். பாண்டியனால் பாராட்டப்பெற்ற பாவலர் பெருமானாகிய திருவள்ளுவர், தாம் வாழும் மயிலையை மீண்டும் அடையவேண்டிப் புறப்பட்டார். சங்கப் புலவர்களைப் பிரிதற்குப் பெரிதும் வருந்தினர். புலவர்களும் வள்ளுவர் பெருமானைப் பிரிதற்கு வருந்திப் புலம்பினார்கள்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" (௩௯௪)

என்ற வள்ளுவரது தெள்ளமுதமொழியையே, தமக்கு ஆறுதல் மொழியாகக் கொண்டு தேறி அமைதியுற்றார்கள். மதுரையைவிட்டு நீங்கிய வள்ளுவர் மயிலையை அடைந்தார். தம் மனையில் புகுந்து கற்பரசியாம் வாசுகியம்மையாரிடத்துத் தாம் பெற்ற பரிசுகளை வழங்கினார். சென்ற இடமெல்லாம் தாமடைந்த சிறப்புக்களை விருப்புடன் கூறி மகிழ்ந்தார். வாசுகியம்மையாரும் தம் கணவரைப் பணிந்து, அவருக்கு இனியன ஊட்டி அரிய இல்லறத்தை அழகுற நடத்திக்கொண்டிருந்தார். யாண்டுகள் பல கடந்தன. வாசுகியார் உயிர் நீங்கும் நிலையடைந்தார். அது கண்ட வள்ளுவர் அவர்பக்கத்திலேயே இருந்து ஆறுதல் மொழிகள் கூறிக்கொண்டிருந்தார். அவ்வேளையில் வாசுகியாரின் உயிர் உடலைவிட்டுப் பிரிதற்குப் பெரிதும் தத்தளித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒன்றைத் தம் கணவரிடத்

துத் தெரிய விரும்பியவர்போல் காணப்பட்டார். அதனை யுணர்ந்த நம் வள்ளுவர் பெருமான், "வாசுகி! நீ என்ன கேட்க விரும்புகிறாய்? விரும்புவதைக்கேள்; விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்," என்று கண்கலங்கக், கண்டார் கலங்கக் கற்றுணர்ந்த வள்ளுவனார், நெஞ்சம் அள்ளூறக் கேட்டருளினார்.

அப்போது வாசுகியம்மையார், நாக்குழறப், "பெரு மானே! தங்கட்கு யான் நாள் தோறும் உணவுபடைக்கும் போது, கிண்ணத்தில் தண்ணீரும் அருகிலொரு சிற்றூசி யும் வைக்குமாறு கட்டளையிடுவீர்களே! அவை எதற்காக என்பதை இன்றுவரை கண்டேனில்லையே! அதன் கார ணத்தை அறிய ஆசையுடையேன்," என்று வேண்டினார். "கற்பரசியே! என் கருத்தைக் கவர்ந்த காதற்களஞ் சியமே! வாசுகியே! நான் உண்ணும்போதோ, நீ படைக் கும்போதோ சோறு கீழே சிந்துமாயின் அதனை ஊசியாற் குத்தியெடுத்து நீரில் கழுவி மீண்டும் இலையிலிட்டு உண்ண வேண்டும் என்னும் எண்ணத்தால் அங்ஙனம் செய்யச் சொன்னேன். அவைகளைப் பயன்படுத்தவேண்டிய நிலை யில் நீ உணவைத் தரையில் சிந்தவும் இல்லை; நான் உண் ணும்போதும் ஒரு சோறு சிந்தியதில்லை; அதனால் அவை எதற்காக வைக்கச்சொன்னேன் என்ற காரணத்தை நீ அறியவில்லை," என்று சொல்லி முடித்ததும், அவ் அம்மை யாரது ஆவி உடனே பிரிந்தது. தமது மனைவியாரைப் பிரிந்த பெருநாவலர் வருந்திப் புலம்பினார்.

பாட்டு

அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவறுத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்னுணரும் பேதையே! நீபிரிந்தால்
என்தூங்கும் என்கண் இரா.

## வசனம்

என்று கதறிக் கலங்கினர். அதன் பின்னர்த் தம் முதல் மாணுக்கராகிய ஏலேலசிங்கரே தமக்கு வேண்டும் பணிவிடைகள் செய்யத் திருமயிலையில் வாழ்ந்து வந்தார்.

## பாட்டு

நன்னகர் மயிலைதன்னில் நாயனுர் வாழும்நாளில்
துன்னிடும் மாணவர்க்குத் தூயதிருக் குறள்நூலை
ஓதுவித்து நீதிகளை உலகெங்கும் பரப்பிவந்தார்
கோதகலக் கற்றுணர்ந்த கொள்கையுள்ள மாணவர்கள்
குறளின் பெருமைகளைக் கண்டுணர்ந்து கொண்டுசென்ருர்
திறமான புலமைகண்டு வெளிநாடும் சிரம்வணங்க
அரும்புலவர் வள்ளுவரும் அளவிலா மகிழ்ச்சிகொண்டார்
பெரும்பிரிவு வருங்காலம் நெருங்குவதை உணர்ந்திட்டார்
அரியமுதல் மாணவராம் அன்பர்ஏ லேலசிங்கர்
பிரியமுதல் மாணவரைப் பேணியருகழைத்திட்டார்
மெய்யான மாணவரே! பொய்யான இவ்வுடலம்
செய்யான உயிர்நீங்கும் வேளையது சேர்ந்ததையோ!
ஆதிபகவன் எனும்பொருளே அம்மையப்பர் அறிந்துய்மின்
என்றுரைத்து அம்மைஅப்பர் இணையடியே எய்தினரே
பொன்ருத புகழுடலைப் பூவுலகில் தாம்நிறுத்தி
குன்ருத ஞானமதைக் குவலயத்தில் தாம்நிறுத்தி
வற்ருத களஞ்சியத்தை வையகத்தே தாம்நிறுத்தி
பற்ருத பரம்பொருளைப் பற்றிமுத்தி சேர்ந்திட்டார்
வீடுற்ற வள்ளுவரின் நாடுற்ற தெய்வக்கதை
பீடுற்ற வழிகாட்டிப் பெரிய உலகினுக்கே
அவர்தந்த குறள்நூலின் அருமை பலவுரைத்தோம்
புவந்தீர்க்கும் நவநிதியாம் பாருலகம் பெற்றதையா!

## வசனம்

தமிழ்வேதமாகிய திருக்குறளின் ஒப்புயர்வற்ற பெருமையைத் தெரிந்த பிறநாட்டுப் பேரறிஞரெல்லாம் தத்தம் மொழியில் மொழிபெயர்த்துப் பன்மொழியாளரும் அறியுமாறு செய்தனர். தமிழ்நாட்டின் தன்னிகரில்லாத— என்றும் மாருத உயர்ந்த அறவொழுக்கத்தின் சின்னமாகத் திகழ்வது திருக்குறள்; தமிழன் பெருமையையும் தமிழர் தம் சிறந்த நாகரிகத்தையும் மலேமேல் இட்ட சுடர் விளக்கென உலகினுக்கு விளக்குவது திருக்குறள் என்று உவந்து வாயார மனமாரப் போற்றினர். இங்ஙனம் மக்களிடையே பேச்சிலும் எழுத்திலும் சிறந்து விளங்கும் தொண்ணூறு மொழிகளில் இந்நூல் பண்பாக மொழிபெயர்க்கப்பெற்றுள்ளதைக் கண்ட கற்ருேர் இதனே 'உலகப் பொதுமறை' என்று ஏத்திப் புகழ்ந்தனர். இதன் ஏற்றத்தைக் காட்டப் புகுந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்,

"வள்ளுவர்செய் திருக்குறளே மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி"

என்று பாராட்டினர்கள்.

திருவள்ளுவர் பிறந்தமையால் செந்தமிழ்நாட்டிற்கு அந்தமில்லாப் புகழ் வளர்ந்தோங்கியதைக் கண்ட தேசீய கவிஞராகிய பாரதியார்,

"வள்ளுவன்தன்னே உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று வாயாரப் பாடி மகிழ்ந்தார்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலேயே எழுந்த இந்த உயர்ந்த நூலின் பாடல்களேயும் கருத்துக்களேயும் எடுத்தாளாத புலவர் எவருமில்லே. தாம் இயற்

றும் எந்த நூலையும் வள்ளுவரின் குறள்மணத்தைக் குழைத்தே இழைத்து வருகின்றூர்கள். வள்ளுவராக்கிய குறள்மணிகளைப் பதிக்காத பைந்தமிழ் நூல்தகடுகளைப் பார்க்கவே முடியாது. அத்தகைய விலைமதிப்பிட முடியாத மாணிக்கங்களைத் தமிழர் வாழவும் உலகம் உய்யவும் தந் தருளிய செந்தமிழ்ப் புலவர்பெருமாணுகிய திருவள்ளுவ ரைப் போற்றுத நாவும் ஒரு நாவாகுமா! துதியாத நெஞ் சும் ஒரு நெஞ்சாகுமா! அவர்தம் பெரும்புகழைக் கேளாத செவியும் ஒரு செவியாகுமா!

## திருக்குறளின் பெருமை

### கொண்டிச்சிந்து—பாட்டு

குறளின் பெருமையைக் கேளும்—திருக்
குறளின் பெருமையைக் கூறிடக் கேளும்
அறம்பொருள் இன்பத்தைக் கூறும்—இன்ப
அரியநல் வீட்டினை ஆராய்ந்தே தேறும்
மாலும் குறளனுய் வந்தான்—அன்று
மாநிலம் ஈரடி யாலளந் திட்டான்
ஞாலம் புகழும்வள் ளுவரும்—உலகை
நற்பாவின் ஈரடியாலளந் திட்டார்
எல்லாப் பொருளையும் சொல்லும்—இதில்
இல்லாத பொருளேதும் உண்டோ? நீர் விள்ளும்
சொல்லாற் பரந்தபன் னூலால்—ஏதும்
சொல்லிடும் பயனில்லை தோன்றுமந் நூலால்
முப்பெரும் பிரிவுகளைக் கொண்ட—தெய்வ
முப்பால் எனும்நூலை இப்பாரில் கண்ட
ஒப்பிலா அறிஞர்கள் சொன்னூர்—இதற்கு
ஒப்பான உயர்வான நூலுள்ள தென்னூர்

நீதிக் களஞ்சியம் என்பார்—இது
நேரில்லா ஞானக் களஞ்சியம் என்பார்
வேதம் தமிழர்க்கீ தென்பார்—உலக
வேதமென் றேசொல்லும் மேன்மையது என்பார்
எக்கால மக்களும் ஏற்பார்—குறள்
இயம்பிடும் உண்மைகளை உலகெங்கும் ஆர்ப்பார்
நற்காலம் தமிழர்க்கொன் றுண்டு—அவரே
நலமான வழிகாட்டி உலகினுக் கின்று

பாலெனச் சுவைதரும் நூலாம்—இளம்
பாலர்களும் ஓதிடும் தீதற்ற நூலாம்
மேலென வள்ளுவர்சொல் நீதி—இந்த
மேதினிக் கேதகும் பேதமில்லை சாதி
அரசினுக் கரியவழி சொல்லும்—மதி
அமைச்சருக் குரியபல அமைதிகளை விள்ளும்
பரசும் அறங்களைப் பகரும்—இதனைப்
படித்தவர்க் கறியாமை இருளறவே தகரும்

நாட்டினுக் கங்கங்கள்கூறும்—அரசு
நன்காளும் செங்கோல் முறைமைகள் வீறும்
ஈட்டும் பொருள்வகை கூறும்—உயர்
ஈகையருள் கல்விநலம் கேள்விமணம் நாறும்
பற்றற்ற துறவிநிலை கூறும்—பாரில்
பற்றுள்ள இல்லறமே மேலென்று கூறும்
பற்றற்ற இறைவனடி பற்ற—நல்ல
பக்குவ மிக்கஅறம் சொல்லும்பின் பற்ற
கற்பியல் களவியல் காணும்—தமிழ்க்
காதல்முறை வாழும்வகை பேதமற மாணும்
பொற்புடைய பெண்ணழகு பேணும்—உலகு
போற்றுமுயர் வாழ்வுமுறை சாற்றவே நாணும்

வடமொழித் தொடர்பற்ற நூலாம்—குறள்
வண்டமிழில் முதல்கண்ட நூல்களில் மேலாம்
திடமுள்ள கால்டுவெல் சொன்னார்—அரிய
தீந்தமிழ் நூலிதைக் கற்றார்வே றெண்ணார்
வெள்ளையர் பேரறிஞர் கிரௌல்—குறள்
வெண்பாவை அன்பாகப் பண்போடு கற்றார்
வெள்ளிப் பையினில் இட்ட—நல்ல
மேலான கோலப்பொற் கனிகள்என் றிட்டார்
போப்புத் துரைமக னாரும்—குறள்
பொன்மொழி தன்னையே கற்றுத் தரணியில்
தன்னிக ரில்லா இதனை—மொழி
பெயர்த்துத் தந்திட்டார் ஆங்கில மதனில்
இன்னவகை பல்லோரும் ஏத்தும்—கற்க
இனியதிருக் குறள்நூலைத் தினமுமே பார்த்தும்
நன்னெஞ்சில் கொள்ளா திருந்தால்—தமிழ்
நாட்டவர் இவரென்று நவிலார் அறிந்தார்.

வசனம்

ஆதலினாலே தமிழ்நாட்டிற் பிறந்த எந்த மகனும் எந்த மகளும் தன் சொந்த வேதம் இந்தத் திருக்குறளே என்பதை நன்றாகக் கண்டு, அதனைக் குற்றமறக் கற்று நல்லொழுக்கமுற்று, நல்லோர் என்று எல்லோரும் போற்று மாறு ஏற்றமொடு வாழ, மன்றாடி, இன்றாடி, வில்லிசையைப் பாடி வேண்டுகின்றோம்.

## வாழ்த்து

### பாட்டு

வாழிய! புலவர் பெம்மான் வள்ளுவர் என்றும் வாழி!
வாழிய! கவிஞர் எல்லாம் வண்டமிழ் போற்றி வாழி!
வாழிய! தமிழர் செல்வம் வண்குறள் நீடு வாழி!
வாழிய! உலக மெல்லாம் வான்மறை கற்று வாழி!

### இசை வேறு

வாழியவே! நீடூழி வந்திருந்து கேட்டவர்கள்
வாழியவே! பல்லூழி வந்துநின்று கேட்டவர்கள்
வள்ளுவர் சரிதமதை உள்ளமுடன் கேட்டவர்கள்
அள்ளூறும் புலவர்கதை ஆர்வமுடன் கேட்டவர்கள்
பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
நல்லாண்டு செல்வமுடன் நானிலத்தில் வாழியவே!
பொன்னனைய குறள்நூலைப் போற்றிநிதம் கற்றவர்கள்
மன்னுபுகழ் நலமோங்கி மாநிலத்தில் வாழியவே!

கழக வெளியீடு — ௯௱௭

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

விலை அணா 8.

அப்பர் அச்சகம், சென்னை-1.